# ஒரு மதிப்பெண் வினாத்தேர்வு

## பத்தாம் வகுப்பு - கணிதம்

### பாடம் - 7 (தேர்வு - 2)



தயாரிப்பு : ப. இளங்கோவன்

பட்டதாரி ஆசிரியர் , அரசு மேல்நிலைப் பள்ளி , கோலியனூர். விழுப்புரம் மாவட்டம்

**1** $1$ செ.மீ ஆரமும் $5$ செ.மீ உயரமும் கொண்ட ஒரு மர உருளையிலிருந்து அதிகபட்சக் கன அளவு கொண்ட கோளம் வெட்டி எடுக்கப்படுகிறது எனில், அதன் கன அளவு (க. செ.மீ–ல்)

(1) $\frac{4}{3}\pi$ (2) $\frac{10}{3}\pi$ (3) $5\pi$ (4) $\frac{20}{3}\pi$

**2** $r$ அலகுகள் ஆரம் உடைய இரு சம அரைக்கோளங்களின் அடிப்பகுதிகள் இணைக்கப்படும் போது உருவாகும் திண்மத்தின் புறப்பரப்பு

(1) $4\pi r^2$ ச. அ (2) $6\pi r^2$ ச. அ (3) $3\pi r^2$ ச. அ (4) $8\pi r^2$ ச. அ

**3** ஓர் உள்ளீடற்ற உருளையின் வெளிப்புற மற்றும் உட்புற ஆரங்களின் கூடுதல் $14$ செ.மீ மற்றும் அதன் தடிமன் $4$ செ.மீ ஆகும். உருளையின் உயரம் $20$ செ.மீ எனில், அதனை உருவாக்கப் பயன்பட்ட பொருளின் கன அளவு

(1) $5600\pi$ க. செ.மீ (2) $11200\pi$ க. செ.மீ (3) $56\pi$ க. செ.மீ (4) $3600\pi$ க. செ.மீ

**4** கீழ்க்காணும் எந்த இரு உருவங்களை இணைத்தால் ஓர் இறகுபந்தின் வடிவம் கிடைக்கும்.

(1) உருளை மற்றும் கோளம் (2) அரைக்கோளம் மற்றும் கூம்பு

(3) கோளம் மற்றும் கூம்பு (4) கூம்பின் இடைக்கண்டம் மற்றும் அரைக்கோளம்

**5** ஓர் உருளையின் ஆரம் அதன் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு எனில், அதன் மொத்தப் புறப்பரப்பு

(1) $\frac{9\pi h^2}{8}$ ச. அ (2) $24\pi h^2$ ச. அ (3) $\frac{8\pi h^2}{9}$ ச. அ (4) $\frac{56\pi h^2}{9}$ ச. அ

**6** ஓர் அரைக்கோளத்தின் மொத்தப் பரப்பு அதன் ஆரத்தினுடைய வர்க்கத்தின் _____மடங்காகும்.

(1) $\pi$ (2) $4\pi$ (3) $3\pi$ (4) $2\pi$

**7** $15$ செ.மீ உயரமும் $16$ செ.மீ விட்டமும் கொண்ட ஒரு நேர்வட்டக் கூம்பின் வளைபரப்பு

(1) $60\pi$ ச.செ.மீ (2) $68\pi$ ச.செ.மீ (3) $120\pi$ ச.செ.மீ (4) $136\pi$ ச.செ.மீ

**8** சமமான விட்டம் மற்றும் உயரம் உடைய ஓர் உருளை, ஒரு கூம்பு மற்றும் ஒரு கோளத்தின் கன அளவுகளின் விகிதம்

(1) 1:2:3 (2) 2:1:3 (3) 1:3:2 (4) 3:1:2

**9** ஓர் உருளையின் உயரத்தை மாற்றாமல் அதன் ஆரத்தைப் பாதியாகக் கொண்டு புதிய உருளை உருவாக்கப்படுகிறது. புதிய மற்றும் முந்தைய உருளைகளின் கன அளவுகளின் விகிதம்

(1) 1:2 (2) 1:4 (3) 1:6 (4) 1:8

**10** $16$ செ.மீ உயரமுள்ள ஒரு நேர்வட்டக் கூம்பின் இடைக்கண்ட ஆரங்கள் $8$ செ.மீ மற்றும் $20$ செ.மீ எனில், அதன் கன அளவு

(1) $3328\pi$ க. செ.மீ (2) $3228\pi$ க. செ.மீ (3) $3240\pi$ க. செ.மீ (4) $3340\pi$ க. செ.மீ

LIVEWORKSHEETS